# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 312/2023
Prosecution Witness -P.W. 2

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சண்முகநாதன் |
| Father's Name | : | குமார் |
| Village | : | தோவாளை, ஆரல்வாய்மொழி |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Caste | : | இந்து மருத்துவர் |
| Calling | : | கூலி |
| Religion | : | இந்து |
| Age | : | 31 |
| Date | : | 07.08.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2024.

( 1, 2 மற்றும் 4 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 3 ஆம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். )

07.08.2024

முதல் விசாரணை :-

நான் ஆரல்வாய்மொழி வில்லவிளையில் தாமசித்து வருகிறேன். அ.சா. 1 ஜெயா எனது மனைவியின் அத்தை. இறந்து போன ஏசுதாசன் எனது சித்தப்பா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். முதலாவதாக நிற்கும் எதிரியின் பெயர் அன்பழகன். இரண்டாவதாக நிற்கும் எதிரியின் பெயர் விஜயன். மூன்றாவதாக நிற்கும் எதிரியின் பெயர் மணிகண்டன். நான்காவதாக நிற்கும் எதிரியின் பெயர் தங்க ஜோஸ். ஏசுதாசன் செங்கல் சூளை வைத்திருந்தார். இறந்து போன ஏசுதாசனுக்கு முதல் எதிரி அன்பழகனின்

அண்ணன் மனைவி அனுசியாவிடம் கள்ளதொடர்பு இருந்தது. 4 வருடங்கள் அனுசியாவும், ஏசுதாசனும் ஓடி போய் தூத்துக்குடியில் இருந்தார்கள். பிறகு தூத்துக்குடியிலிருந்து வந்து தனிதனியாக பிரிந்து இருந்தார்கள். அதனால் அன்பழகன், விஜயன் ஆகியோருக்கும் ஏசுதாசனுக்கும் அடிக்கடி சண்டை வரும். 05.05.2023 ஆம் தேதி மணிகண்டனும், அன்பழகனும் ஏசுதாசனை பாட்டில் வைத்து மண்டையில் அடித்தார்கள். அதன்பிறகு 09.06.2023 அன்று இரவு 8.10 மணியளவில் வேலைக்கு போய்விட்டு சாப்பிடுவதற்காக ஆரல்வாய்மொழியில் உள்ள செண்பகராமன்புதூர் ரோட்டில் அமைந்துள்ள சிஎஸ்ஐ கோவில் அருகில் வந்து கொண்டிருந்தேன். அப்போது எதுத்தால் போல் சுரேஷ் டால்டன் வந்தான். அப்போது அன்பழகன், விஜயன், மணிகண்டன், தங்க ஜோஸ் ஆகிய 4 பேரும் ஏசுதாசனை அடிக்கப் போவதாக சொன்னான். சுரேஷ் டால்டனுடன், அந்தோணி ராஜ் ம் வந்தார். நான் உடனே அ.சா. 1 ஜெயாவுக்கு போன் அடித்தேன். ஆரல்வாய்மொழி கிறிஸ்துநகர் மேற்கு பார்த்து செல்லும் பாதையில் அப்போது இருந்தேன். சித்தப்பா ஏசுதாசனை இங்கு வர சொல்லாதீர்கள் என சொன்னேன். அந்த நேரத்தில் அ.சா. 1 ஜெயா பன்னீர் வீட்டு பக்கத்தில் இருந்து வந்தார்கள். ஏசுதாசன் அவர்கள் செண்பகராமன்புதூர் பக்கத்திலிருந்து கிறிஸ்து நகர் செல்லும் பாதை நோக்கி வந்தார்கள். பன்னீர் வீட்டு பக்கத்திலிருந்து ஜெயா சிஎஸ்ஐ சர்ச் அருகே வந்து கொண்டிருந்தார். அங்கே பாப்பா வீட்டு காம்பவுண்ட் இருந்தது. அந்த காம்பவுண்ட்டை ஒட்டி ஆஜர் எதிரிகள் நின்று கொண்டிருந்தார்கள். ஏசுதாசன் அந்த பக்கம் வரவும் தங்க ஜோஸ் ஏசுதாசனின் பைக்கை முன்னாடி போய் நிறுத்தினான். மணிகண்டனும், விஜயனும் ஏசுதாசனின் இரண்டு பக்கமும் நின்று அவரின் கைகளை பிடித்து இழுத்தார்கள். அதன்பிறகு தங்க ஜோஸ் ஏசுதாசனின் கழுத்தை பின்பக்கமாக இழுத்துப் பிடித்தான். அன்பழகன் ஏசுதாசனை வலது மார்பிலும், நெஞ்சு நடுப் பகுதியிலும், வயிற்றிலும், அடிவயிற்றிலும் கத்தியால் குத்தினான். ஏசுதாசனுக்கு குத்துக் காயம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டார். அப்போது செண்பகராமன்புதூர் ரோட்டிலிருந்து

கிறிஸ்து நகரை பார்த்து பைக்கில் வந்து கொண்டிருந்தார். நானும், ஜெயாவும் ஏசுதாசனை ஸ்டீபனின் பைக்கில் ஏற்றி உட்கார வைத்தோம். ஸ்டீபன் பைக்கை ஓட்டினார். நான் பின்னால் அமர்ந்தேன். நடுவில் ஏசுதாசனை வைத்துக் கொண்டு ஆரல்வாய்மொழி கனி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு சென்றவுடன் காயங்களுக்கு கட்டுப் போட்டுவிட்டு முடியாது என்று சொல்லிவட்டு மனுவேல் மருத்துவமனைக்கு கொண்டு போக சொன்னார்கள். நான் ஏசுதாசனின் மகன் சுதனுக்கு அவர் குத்துப் பட்டதை போன் செய்து சொன்னேன். அவர் மனுவேல் மருத்துவமனைக்கு வந்தார். மனுவேல் மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் ஏசதாசனை கொண்டு சென்றோம். நானும், ஜார்ஜ் ஆன்றனியும் அவருடன் சென்றோம். ஜெயா ஆட்டோவில் பின்னாடியே வந்தார். அங்கு போனவுடன் ஏசுதாசன் இறந்து விட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நானும் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சென்றவுடன் ஆரல்வாய்மொழி காவல் நிலையத்திலிருந்து சுமார் 10.30 மணியளவில் போலீசார் வந்தார்கள். நாங்கள் எழுதி கொள்ளவா, நீங்கள் எழுதி தருகிறீர்களா என போலீசார் கேட்டார்கள். நாங்கள் எழுதி தருகிறோம் என சொல்லி ஜெயா சொல்ல சொல்ல ஆரல்வாய்மொழியை சேர்ந்த விஜயன் என்பவர் ஒரு மனுவை எழுதி போலீசாரிடம் கொடுத்தார்கள். அந்த மனுவில் சுதன் ஜெயாவுக்கு படித்துக் காண்பித்துவிட்டு கையெழுத்துப் போட்டான், ஜெயாவும் கையெழுத்துப் போட்டார். சம்பவம் நடந்த சமயம் இரவு சுமார் 8.15 இருக்கும். சம்பவம் இடம் அருகில் இருந்த தெருவிளக்கில் சம்பவத்தை பார்த்தோம். சம்பவம் முடிந்த பிறகு மணிகண்டனும், அன்பழகனும் மணிகண்டனின் பைக்கில் ஒரு பக்கம் சென்றுவிட்டார்கள். மற்ற இருவரும் இன்னொரு பைக்கில் மேற்கு பக்கம் சென்றார்கள். சம்பவ நடந்த இடத்திலிருந்து பூதப்பாண்டிக்கு செல்லும் ரோடும் நான் சொல்லும் செண்பகராமன்புதூர் ரோடும் ஒரே ரோடுதான். அன்பழகன் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 கத்திதான் அந்த கத்தி.

என்னிடம் காட்டப்படும் சா.பொ. 2 சட்டைதான் அப்போது ஏசுதாசன் அணிந்திருந்தது. என்னிடம் காட்டப்படும் சா.பொ. 4 லுங்கிதான் அப்போது அவர் அணிந்திருந்த லுங்கி. எதிரிகள் பயன்படுத்திய பைக்குகளையும், ஏசுதாசன் ஓட்டி வந்த பைக்கையும் என்னால் அடையாளம் காட்ட முடியும். அவை சா.பொ. 6 முதல் 8 ஆக குறியீடு செய்யபட்டுள்ளது. போலீசார் என்னை அன்றைய தினமே ஆசாரிபள்ளம் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை (1 ஆம் எதிரி தரப்பில்) :-

சுரேஷ் டால்டன் என்னிடம் எதிரிகள் ஏசுதாசனை அடிக்க போவதாக சொன்னவுடன் ஏசுதாசனுக்கு போன் செய்து சொல்லவில்லைய என்றால் அவருடைய போன் நம்பர் என்னிடம் இல்லை அதனால் சொல்லவில்லை. ஜெயாவிற்கு நான் போன் செய்ததாக சொல்வதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய போன் உள்ளது அதை போலீசாரி கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றினார்கள். அந்த செல்போனில் நான் எத்தனை மணிக்கு யார் யாருக்கு போன் செய்த விவரம் உள்ளதா என்றால் ஆமாம். சுரேஷ் டால்டன் ஏசுதாசனுக்கு போன் செய்து தகவல் சொன்னாரா என்றால் அது எனக்கு தெரியாது. இதற்கு முன்னர் நான் பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த நீதிமன்றத்தில் நான் உண்மையாக நடந்த விவரத்தை தான் சொன்னேனா என்றால் ஆமாம். அந்த விவரங்கள்தான் நான் சரியாக பார்த்த விவரங்களா என்றால் இல்லை. நான் தற்போது சொல்வதுதான் சரியான விவரம். அங்கு பூதப்பாண்டி நீதிமன்ற நீதிபதி என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தாரா என்றால் பதிவு செய்தார். அந்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்துதான் கையெழுத்துப் போட்டேனா என்றால் படித்து பார்க்க தெரியாது கையெழுத்து மட்டும்தான் போடத் தெரியும். என்னிடம் காட்டப்படும் சம்மனில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு ஆங்கிலமும், தமிழும் படிக்கவும் எழுதவும் தெரியும் என்றால்

தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் எ.த.சா.ஆ 2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. நான் எந்த பக்கத்திலிருந்து வந்தேன் என்றால் ஆரல்வாய்மொழியிலிருந்து செண்பகராமன்புதூர் நோக்கி வந்தேன். நான் சிஎஸ்ஐ சர்ச் அருகே வரும்போது ஜெயாவை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சிஎஸ்ஐ கோவில் பக்கம் வரும்போது ஜெயா கிறிஸ்து நகர் தெருவிலிருந்து வருவதை பார்த்தேனா, போவதை பார்த்தேனா என்றால் வருவதை பார்த்தேன். நான் என் பைக்கில் தான் வந்து கொண்டிருந்தேனா என்றால் ஆமாம். எனக்கு சொந்தஊர் வில்லவிளை என்றால் சரிதான். நான் ஆரல்வாய்மொழியிலிருந்து தான் வந்து கொண்டிருந்தேனா என்றால் சரிதான். வில்லவிளை போவதற்கு ஆரல்வாய்மொழியிலிருந்து தேசிய நெடுஞ்சாலை வழியாக நேரடியாக வந்து போகலாம் என்றால் சரிதான். அ.சா. 1 ஜெயா இறந்தவரின் பைக்கில் ஏறினாரா என்றால் இல்லை. நான் அ.சா. 1 ஜெயாவை ஏசுதாசன் பைக்கில் கூட்டி வருவதை அந்த சமயத்தில் எப்போதாவது பார்த்தேனா என்றால் இல்லை (எதிரி தரப்பு வழக்கறிஞர் கு.வி.மு.ச. 164 வாக்குமூலத்திலிருந்து சாட்சி சொன்னதாக ஒரு பகுதியை படிக்க ஆரம்பித்தவுடனேயே சாட்சி நான் அப்படி எதுவும் சொல்லவில்லை என கூறுகிறார்). பூதப்பாண்டி நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் அப்போது ஏசுதாசன் அவரது மனைவியை அவர் பைக்கில் கூட்டி வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் கொடுத்த வாக்குமூலத்தில் நான் அ.சா. 1 ஜெயாவுக்கு போன் செய்ததாகவும், அப்போது வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். எனக்கு அந்த சமயத்தில் எனது செல்போனில் வேறு ஏதாவது போன் வந்ததா என்றால் வரவில்லை. இறந்து போன ஏசுதாசன் மகன் ஜார்ஜ் ஆன்றனி என்பவரை மூன்று நபர் போன் பண்ணி மிரட்டினார்கள், நான் அப்போது என்னிடம் சொன்னார் நான் அங்கே நிற்காதே இங்கே வா என்று பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தேனா என்றால் ஆமாம். அளித்தேன். அப்படி சொல்லிவிட்டு தான்,

‘‘அப்போது ஏசுதாசன் அவரது மனைவியை அப்போது கூட்டி வரவும், நான்கு பேர் சேர்ந்து மூன்று பேர் பிடித்து ஒருவன் குத்தினான்’’ என்றும் ஒருவன் அங்கிருந்து குத்து என்று கூறினான் என்றும், பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் சரியல்ல நான் கூறவில்லை. ஆசாரிபள்ள மருத்துவமனைக்கு போலீசார் வந்து நாங்கள் எழுதி கொள்ளட்டுமா, நீங்கள் எழுதி தருகிறீர்களா என்று கேட்டதாக தற்போது நான் சொன்ன விவரத்தை போலீசார் விசாரிக்கும்போதோ பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்கும்போது கூறவில்லை என்றால் சரியல்ல கூறினேன். போலீசார் விசாரிக்கும்போதோ பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்கும்போதோ விஜயன் மனு எழுதி கொடுத்தார் என்ற நான் தற்போது சொன்ன விவரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல கூறினேன். போலீசார் விசாரிக்கும்போது ஜெயாவின் மகன் சுதன் புகாரை எழுதினார் என கூறினேன் என்றால் சரியல்ல அப்படி கூறவில்லை. நான் சிஎஸ்ஐ கோவில் அருகே செல்லும்போது அங்கு ஆட்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். டேவிட் கடைக்கு முன்னரும் ஆட்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். ஏசுதாசனை இரண்டு நபர்கள் இரண்டு பக்கமும் நின்று கையை பிடித்துக் கொண்டார்களா என்றால் ஆமாம். அதன்பிறகு அவரை குத்திய பிறகுதான் ஏசுதாசன் பைக்கிலிருந்து கீழே விழுந்தாரா என்றால் இல்லை முதலிலே பைக்கிலிருந்து கீழே இழுத்து விட்டார்கள். அவரை இழுத்துவிட்ட உடன் நான் போகவில்லையா என்றால் இல்லை. கையில் கத்தி இருந்ததால் நான் போகவில்லை. அந்த இரண்டு நபர்கள் ஏசுதாசனின் கையை பிடித்துக் கொண்டதாகவும், ஒரு நபர் பின்பக்கம் கழுத்தை பிடித்துக் கொண்டார்கள் என்றும், போலீசார் விசாரிக்கும்போதோ, பூதப்பாண்டி நீதிமன்றத்திலோ நான் சொல்லவில்லை என்றால் போலீசார் விசாரிக்கும்போது அந்த விவரங்களை கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை நீதிமன்றத்தில் நான் சொன்னேன். போலீசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் இரவு 10.30 மணியிலிருந்து 11.00 மணிவரையில் விசாரித்தார்கள். வாக்குமூலம் வாங்க வந்தவர்கள் விசாரித்தார்களா, வேறு யாரும்

விசாரித்தார்களா என்றால் வாக்குமூலம் வாங்க வந்தவர்கள் விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 ஜெயா எத்தனை மணிக்கு மனவேல் மருத்துவமனைக்கு ஆட்டோவில் வந்தார்கள் என்றால் இறந்தபிறகு வந்தார்கள். அந்த அம்மா ஆட்டோவில் வந்ததாக போலீசார் விசாரிக்கும்போதோ, பூதப்பாண்டி நீதிமன்றத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ 1 வாக்குமூலம் எழுதிய கையெழுத்தும், சுதனின் கையொப்பமும் வேறுபட்டு இருப்பதால் தான் தற்போது அரசு தரப்பில் சொல்லிக் கொடுத்து, அந்த மனுவை எழுதியது விஜயன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. யாரும் எனக்கு சொல்லி தரவில்லை. நான் சொல்வதுபோல விஜயன் என்று ஒரு நபரே இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கூடி இருந்த ஆட்கள் யாராவது எங்களுக்கு உதவிக்காக வந்தார்களா என்றால் வரவில்லை. நான் சொல்லக் கூடிய இடத்தில் அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்பதால்தான் யாரும் உதவிக்கு வரவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுடுகாடு கிறிஸ்து நகரின் மேற்கு பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல. சுடுகாடு பக்கத்தில் ஒரு தெரு தெற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். அந்த தெரு பூதப்பாண்டி ஆரல்வாய்மொழி மெயின்ரோட்டை போய் சேரும் என்றால் சரிதான். அந்த சுடுகாட்டை ஒட்டிதான் அந்த ஏசுதாசன் குடும்பத்திற்கு சொந்தமான செங்கல் சூளை உள்ளது என்றால் சரிதான். நான் ஏசுதாசனுக்கு காயம் ஏற்பட்டதாக சொல்வதும், நான் குறிப்பிட்ட நேரத்தில் காயம் ஏற்பட்டதாக சொல்வதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல பாப்பா வீட்டு காம்பவுண்ட் அருகே எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நடந்தது. வேறு விதமாக வேறு எங்கோ நடந்த சம்பவத்தை வெளிச்சம் இருந்ததாக காட்டுவதற்காக அந்த இடத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏசுதாசனுக்கு ஏற்பட்ட காயங்களுக்கும், முதல் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் முதல் எதிரிக்கும் சா.பொ. 1 கத்திக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நானும், அ.சா. 1

ஜெயாவும் ஏசுதாசனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று பார்க்கவில்லை என்றாலும் போலீசாரின் கற்பனையாக ஜோடித்த வழக்கிற்கு ஏற்ப பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (2 ஆம் எதிரி தரப்பில்) :-

நான் 7 ஆம் வகுப்பு படித்துள்ளேன். என்னை போலீசார் ஆசாரிபள்ளத்தில் வைத்து விசாரிக்கும்போது ஏசுதாசனுக்கும், இரண்டாம் எதிரி விஜயனுக்கும் அடிக்கடி தகராறு நடந்தது என்று சொன்னேனா என்றால் சொன்னேன். 05.05.2023 அன்று அன்பழகனும், மணிகண்டனும் ஏசுதாசனின் மண்டையை அடித்து உடைத்ததாக சொல்லும் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கிற்காக போலீசார் சொல்லி தந்துதான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இப்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலி வேலை செய்கிறேன். என்ன கூலி வேலை என்றால் செங்கல் சூளைக்கு தீ போடுகிறேன். இந்த சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய சமயத்தில் எந்த சூளையில் வேலை செய்தேன் என்றால் ஆரல்வாய்மொழியில் உள்ள செல்வன் என்பவர் சூளையில் வேலை செய்கிறேன். அந்த சூளை எங்கு உள்ளது என்றால் ஆரல்வாய்மொழிக்கு மேற்கே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. என்னை போலீசார் விசாரிக்கும்போது அவ்வாறு ஆரல்வாய்மொழிக்கு மேற்கே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செல்வனின் சூளையில் வேலை செய்வதாக சொன்னேனா என்றால் சொன்னே. ஆரல்வாய்மொழி சுற்று வட்டாரத்தில் சுமார் 300 க்கும் மேற்பட்ட சூளைகள் உள்ளது என்றால் சரிதான். ஆரல்வாய்மொழி வில்லவிளையில் பல சமுதாயத்தை சார்ந்தவர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதேபோல் ஆரல்வாய்மொழி செண்பகராமன்புதூர் சுற்று வட்டாரத்தில் உள்ள செங்கல் சூளைகளை பல சமுதாயத்தை சார்ந்தவர்கள் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த செங்கல் சூளையில் செங்கல்

வியாபாரம் பண்ணுவதில் ஒருவருக்கு மற்றொருவர் போட்டியாக இருக்கும் என்றால் சரிதான். ஆரல்வாய்மொழி சந்திப்பு என்பது மூன்று ரோடுகள் இணைந்து இருப்பதுதான் சந்திப்பு என்றால் சரிதான். அந்த சந்திப்பிலிருந்து ஒரு 200 அடி கிழக்கு பக்கம் தான் ஆரல்வாய்மொழி காவல் நிலையம் இருக்கிறது என்றால் சரிதான். அந்த காவல் நிலையத்திற்கு முன்பாக மேற்கு பக்கத்தில்தான் கனி மருத்துவமனை இருக்கிறது என்றால் சரிதான். அந்த கனி மருத்துவமனைக்கு மேற்கு பக்கம் பஞ்சாயத்து அலுவலகத்தின் கிழக்கு பக்கம் தமிழ்நாடு அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். தற்போது சாட்சி அங்கு இருப்பதாக தெரியவில்லை நான் அவ்வாறு எதுவும் பார்க்கவில்லை. அதேபோன்று ஆரல்வாய்மொழி ஜங்சனிலிருந்து மீனாட்சிசுந்தரேஷ்வரர் கோவில் செல்லும் சாலையிலும் 24 மணி நேரமும் இயங்கும் ஒரு அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். ஆரல்வாய்மொழி சந்திப்பிலிருந்து பூதப்பாண்டி செல்லக் கூடிய சாலை 24 மணி நேரமும் வாகனங்கள் வந்து செல்லக்கூடிய சாலை பிரதான சாலை என்றால் சரிதான். அந்த பகுதி காலை 10 லிருந்து இரவு சுமார் 11 மணி வரையிலும் ஆட்கள் அதிகமாக நடமாட்டம் உள்ள பகுதி என்றால் எப்போதும் அவ்வாறு இருக்காது. சம்பவம் நடந்ததாக சொல்லக் கூடிய இடம் அந்த இடத்தில் சிஎஸ்ஐ சர்ச்சில் தினமும் காலை மதியம் இரவு சமயத்தில் ஆராதனைகள் நடக்கும் என்றால் சரிதான். நான் சிஎஸ்ஐ வகுப்பை சார்ந்தவனா என்றால் இல்லை நான் இந்து. நான் 09.06.2023 ம் தேதி அந்த சிஎஸ்ஐ சர்ச்சின் கோவில் பக்கத்தில் நிற்கும்போது அந்த தேவாலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். அன்றைய தினம் அந்த தேவாலயத்திற்கு வந்த பொதுமக்களும், டேவிட் கடைக்கு வந்த பொதுமக்களும், அந்த பக்கம் வந்த பொதுமக்களும் நிறைய பேர் அந்த சமயத்தில் இருந்தார்களா என்றால் சரியல்ல, கடை பக்கம் ஒன்றிரண்டு பேர் இருந்தார்கள். கோவில் அருகே ஜெபம் முடிந்த பிறகுதான் வருவார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லகூடிய இடத்தில் நான் அந்த இடத்தில்

இல்லை, இறந்தவர் என்னுடைய உறவினர் என்பதால் போலீசார் சொல்லி தந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த உடன் எனது சித்தப்பாவை தூக்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவரை தூக்கிப்பார்த்து வண்டியில் தூக்கி வைத்து போது என் உடலில் இரத்தம் பட்டதா என்றால் நான் பின்பக்கத்திலிருந்து தான் தூக்கி பார்த்தேன் என் துணியில் இரத்தம் படவில்லை. அப்படி ஒரு சம்பவமுமே நடைபெறவில்லை என்றாலும், நான் அவரை தூக்கி பார்க்கவில்லை என்றாலும், என் உடையில் இரத்தம் படவில்லை என்றாலும் சரியல்ல. அந்த பைக்கில் ஏசுதாசனை தூக்கி வைக்கும்போது பைக்கில் அவருடைய இரத்தம்பட்டதா என்றால் பட்டது. ஸ்டீபனின் பின்பகுதியில் துணிகளில் இரத்தம்பட்டதா என்றால் பட்டது. இந்த விவரங்களை ஆசாரிபள்ளத்தில் போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொல்லவில்லை. கனி மருத்துவமனையில் எவ்வளவு நேரம் ஏசுதாசனை சிகிச்சைக்கு வைத்திருந்தார்கள் என்றால் 10 நிமிடம் வைத்திருந்தார்கள். அந்த 10 நிமிடத்தில் சம்பவம் குறித்து தெரிந்து கொண்டு போலீசார் அங்கு வந்துவிட்டார்களா என்றால் வரவில்லை. கனி மருத்துவமனையில் சிகிச்சைக்காக ஏசுதாசனை சேர்க்கும்போது நான் தான் கையொப்பம் செய்தேனா என்றால் நான் கையொப்பம் செய்யவில்லை யார் கையொப்பம் செய்தது என்றால் நான் அதை கவனிக்கவில்லை. ஒரு நபரை மருத்துவமனையில் அனுமதிக்கும்போது அந்த மருத்துவமனையில் காயம்பட்டவரின் பெயர், விலாசம் போன்றவற்றை குறித்துக் கொண்டுதான் அனுமதிப்பார்கள் என்றால் ஏசுதாசனை அனுமதிக்கவில்லை கொண்டு சென்றவுடனேயே பஞ்சு வைத்து கட்டினார்கள் பார்த்துவிட்டு வேறு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னார்கள். என்னை ஆசாரிபள்ளம் வைத்து புலன் விசாரணை செய்த போலீசாரிடம் கனி மருத்துவமனையில் ஏசுதாசனுக்கு பஞ்சு வைத்து முதலுதவி செய்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். இரண்டாம் எதிரிக்கு நான் சொல்வது போல வாகனங்கள் எதுவும் கிடையாது என்றாலும் போலீசார் சொல்லி கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் பல முறை சாதி சண்டைகள் கலவரங்கள் நடந்தது என்றால் எனக்கு தெரிந்தபடி சாதி சண்டை எதுவும் நடைபெறவில்லை. அன்றைய தினம் 09.06.2023 ஆம் தேதி வில்லவிளையில் ஏற்பட்ட சாதி மோதலில் சுடுகாட்டுக்கு பக்கம் கூடிய செங்கல் சூளையில் வைத்து நடந்த தகராறில் ஏசுதாசனுக்கு ஏற்பட்ட காயத்தை மறைத்து, திட்டமிட்டு இரண்டாம் எதிரியை இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்பதற்காக போலீசார் சொல்லிகொடுத்து உருவாக்கப்பட்ட பொய் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் அப்படி ஒரு சம்பவமோ நடைபெறவில்லை என்றால் சரியல்ல நடந்தது. அந்த சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் இரண்டாம் எதிரி ஊரிலே இல்லை என்றால் சரியல்ல அங்கே தான் இருந்தார். நான் நடந்ததாக சொல்லும் சம்பவத்துக்கும், இரண்டாம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கினுடைய புகார் மனு ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் வைத்து போலீசாரால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பூதப்பாண்டி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நீதிபதி முன்பாக சாட்சியம் அளிக்கும்போது தெளிவான மனநிலையில்தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். தற்போதும் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்வதற்கு போலீசார் சொல்லி தந்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன அனைத்தும் பொய்சாட்சியம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்து போன ஏசுதாசன் என்னுடைய உறவினர் என்பதால் இந்த எதிரிகளை சிக்க வைக்க வேண்டும் என்று திட்டமிட்டு ஆர்வத்துடன் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (3 ஆம் எதிரி தரப்பில்) :-</u>

மணிகண்டனுக்கு சொந்த ஊர் எது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது மணிகண்டனை எனக்கு எப்படி தெரியும், எவ்வளவு நாளாக தெரியும் என்றோ, சம்பவத்திற்கு முன்னரா அல்லது பின்னரோ தெரியும் என்றோ

போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போதும் எனக்கு எதிரி மணிகண்டனை தெரியாது என்றால் சரியல்ல. அவ்வாறு நான்கு பேர் ஒருவரை அடிப்பதற்கு நிற்கும்போது அதை பார்த்த நான் அந்த நபருக்கு சத்தம்போட்டோ, சைகை காட்டியோ நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். கையில் கத்தியுடன் இருந்ததால் நான் சொல்லவில்லை. அப்படி ஒரு சம்பவத்தை நான் பார்த்திருந்தால் சாதாரண மனிதன் சத்தம் போட்டிருப்பான் என்றாலும் நான் கூறுவது போல சம்பவம் எதையும் பார்க்காததால் தான் சத்தம் எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. கனி மருத்துவமனையிலிருந்து ஆரல்வாய்மொழி காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்தில் போய் விடலாம் என்றால் சரிதான். கனி மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு சம்பவம் பற்றி தகவல் கொடுப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் பற்றி எதுவும் தெரியாததால் தான் நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவரை காப்பாற்றுவதற்காக 108 ஆம்புலன்சில் ஏற்றுவதில் முனைந்திருந்தோம் அதனால் அதை பற்றி யோசிக்கவில்லை. 108 ஆம்புலன்சில் ஏற்றுவதற்காக முனைந்திருந்தோம் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல 3 ஆம் எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (4 ஆம் எதிரி தரப்பில்) :-</u>

நான்காம் எதிரி தங்க ஜோஸ் என்னுடைய சித்தப்பா ஏசுதாசனை கழுத்தை பின்பக்கம் பிடித்ததாக போலீஸ் விசாரணையின் போதும், பூதப்பாண்டி நீதிமன்றத்தில் சொன்னேனா என்றால் நீதிமன்றத்தில் சொன்னேன், போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. 4 ஆம் எதிரி ஏசுதாசனின் பைக்கின் முன்பக்கம் நிறுத்தியதாக போலீசார் விசாரிக்கும்போதோ, பூதப்பாண்டி நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால்

போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை. நீதிமன்றத்தில் சொன்னேன். 4 ஆம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.